சுருக்கம்

<u>நகராட்சி சேவைப் பணிகள் — தனியார்மயமாக்கல் — வழிகாட்டு நெறிகள் — வெளியிடப்படுகிறது.</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை

அரசாணை (நிலை) எண். 69 நாள்: 4.5.98

<u>ஆணை:</u>

தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 40 சதவிகிதத்தினர் நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். இப்பகுதிகளில் நகராட்சிகளின் சேவைப்பணிகளை பயனுள்ள விதத்தில் திறம்பட வழங்குதல் நகராட்சிகளின் கடமையாகும்.

2. அரசு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சேவைப்பணிகளை திறம்பட நிறைவேற்றவுள்ள கருவிகளில் ஒன்று தனியார் மயமாக்கல் எனக் கருதப்படுகிறது. சேவைப் பணிகளைப் பிரித்து அவற்றில் தனியார் மயமாக்கப்பட்டால் பயன்விளைவிக்கக்கூடிய பணிகளை மட்டும் தனியாரிடம் ஒப்படைப்பது சாலச் சிறந்தது. அத்தகைய தனியார் மயமாக்கல், எந்தவகையிலும் தனியார் துறையின் ஏகபோகத்திற்கு வழியேற்படுத்தக் கூடாது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

3. மேலே பத்தி இரண்டில் கூறப்பட்டுள்ள நிலையில் ஒரு கொள்கை அடிப்படையிலான வழிகாட்டு நெறிகளை வெளியிடுவது பயனுள்ளதாக இருக்கும் என அரசு கருதுகிறது. இக்கருத்தின் அடிப்படையில் ஓர் கொள்கைக் குறிப்பு தயாரிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

4. கொள்கைக் குறிப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சி ஆணையர்கள் பேரூராட்சி செயல் அலுவலர்கள் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர்/பேரூராட்சி ஆணையர் மூலமாக அரசுக்கு அவ்வப்போது அறிக்கை அனுப்புமாறும் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி
அரசு செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.

நகராட்சி நிர்வாக ஆணையரகம்
சென்னை-5.

ப.மு.எண். 33578/98/குவ3 <u>நாள்: 5.3.99</u>

அனைத்து நகராட்சி ஆணையர்கள் மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

ஒம்/எஸ். ஜெயராமன்
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக

பெறுநர்
அனைத்து நகராட்சி ஆணையர்கள்
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்

நகல்:
கூடுதல் இயக்குநர் (மெக்)
இருப்பு கோப்பு 1
உதிரி - 2.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்.

<u>தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்த கொள்கைக் குறிப்பு</u>

தமிழ்நாட்டில் நகர்ப்புற பகுதிகளில், மக்கள் தொகையில் 40 சதவிகிதத்தினர் வாழ்கின்றனர். இப்பகுதிகளில் நகராட்சிகளின் சேவைப்பணிகள் பயனுள்ள வகையிலும், திறம்படவும் நிறைவேறுதல் உறுதி செய்யப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத்தின் 74-வது திருத்தத்தை மாநிலம் ஏற்றுக் கொண்டது சேவைப் பணிகளை திறம்பட நிறைவேற்றுவதில் அரசின் கொள்கை ரீதியான இடையீட்டினைக் குறிக்கும் ஓர் ஆரம்ப அடையாளமாகும். 1996 செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் சுமார் 700-க்கும் மேற்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டன. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயலாற்றலை வளர்க்கும் பணியை அரசு தற்போது மேற்கொண்டு வருகிறது.

பயனுறும்வகையில், திறம்பட சேவைப்பணிகளை நிறைவேற்றவுள்ள கருவிகளில் ஒன்று தனியார் மயமாக்கல் என்பதை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இருந்த போதிலும் தேவைப்படின், சேவைப் பணிகளை கட்டவிழ்த்து, குறிப்பாக சிலவற்றை அடையாளங்கண்டு பிரித்தெடுத்து அவற்றை எவ்வகையிலும் அரசின் மேலான நோக்கத்திற்கு குந்தகம் ஏற்படாத வகையில் தனியார் மயமாக்கப்பட வேண்டும். எனவே, ஒவ்வொரு சேவைப்பணியிலும் பின்வரும் அம்சங்கள் தனியார் மயமாக்கப்படக்கூடியவை என அரசால் அடையாளம் காணப்பட்டுள்ளன:-

<u>முதன்மை மற்றும் இதர சேவைப் பணிகள்</u>

பின்வருவன முதன்மை மற்றும் இதர சேவைப்பணிகள் என கருதப்படுகின்றன:-

<u>முதன்மை சேவைப் பணிகள்:</u>

1) திடக்கழிவு மேலாண்மை
2) தெருவிளக்குகள் பராமரிப்பு
3) சாலைகள் மற்றும் பாலங்கள் பராமரிப்பு
4) குடிநீர் மற்றும் துப்புரவுப் பராமரிப்பு

<u>இதர சேவைப்பணிகள்:-</u>

1) பூங்காக்கள்
2) வணிக வளாகங்கள்
3) சந்தைகள்

..2

## இயக்கம் மற்றும் பராமரிப்பு

**முதன்மைப் பணிகள் :-**

**திடக் கழிவு மேலாண்மை :-**

நகராட்சியின் திடக் கழிவு மேலாண்மை கீழ்க்கண்ட இன்றியமையாத கூறுகளைக் கொண்டது :

அ) வீடுகளிலிருந்து திடக் கழிவுகளை சேகரித்தல்
ஆ) தெருக்களில் குப்பை கூட்டுதல்.
இ) பேருந்து நிலையங்கள், சந்தைகளை சுத்தம் செய்தல்
ஈ) குப்பைகளை இடமாற்ற நிலையங்களுக்கு (Transfer Stations) எடுத்துச்செல்வது
உ) இறுதியாக குப்பைகள் கொட்டப்படும் களத்திற்கு (Dumping yard) எடுத்துச் செல்லுதல்
ஊ) குப்பைக் களங்கள் மேலாண்மை
எ) அழுகக்கூடிய மற்றும் அழுகாத பொருட்களை மறுபயனுக்குத் திருப்புதல்.

மேற்கண்ட ஏழு பணிகளில் (ஆ), (இ), (உ), (ஊ) மற்றும் (எ) ஆகிய பணிகள் தனியார் மயமாக்கக் கூடிய சாத்தியமுள்ளவை. நாள்தோறும் குப்பைகளை வீடுகளில் இருந்தும், தெருக்களிலிருந்தும் மொத்தமாக சேகரிப்பதையும், தெருக்களை சுத்தம் செய்வதையும் மட்டும் நகராட்சிகள் மேற்கொள்ளுவது மிகச் சிறந்தது. அதற்கடுத்து, குப்பைகளை இறுதியாக குப்பைக் கொட்டும் களத்திற்கு ஏற்றிச் செல்வது வரையிலான இடைப்பட்ட பணிகளை தனியாரிடம் விட்டுவிடுதல் நலம். தனியார் மயமாக்கப்படுதல் என்பது தனியார் துறையின் ஏகபோகத்திற்கு வழிவகுக்காமல் இருக்க வேண்டியதை உறுதி செய்தல் வேண்டும். ஏனெனில், தனியார்மயமாக்கல் என்ற கொள்கைக்கே அது எதிரானதாக அமையும். குப்பை கொட்டும்களங்களை மேலாண்மை செய்வதும் குப்பைகளை மறுபயனுக்குத் திருப்புவதும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக உள்ளதால் அவற்றை தனியார் துறையினர் சிறப்பறிவுத் திறனுக்கே விட்டுவிடுதல் நலமான செயலாகும்.

ஆ) அதேபோன்று பேருந்து நிலையங்கள் மற்றும் சந்தைகளை இரவு நேரங்களில் துப்புரவு செய்யும் பணியை தனியாரிடம் ஒப்பந்த முறையில் விட்டுவிடுவதை சில நகராட்சிகள் சோதனை முறையில் கடைப்பிடித்து வருகின்றன. இம்முறை நல்ல பயன்தரக்கூடியதாக உள்ளது. அத்தகைய ஒப்பந்தங்களில் அகற்றப்பட்ட குப்பைகளின் எடை அளவுக்கேற்பபணம் வழங்கலாம்.

இ) <u>தெருவிளக்குகள் பராமரிப்பு</u> : தெருவிளக்குகள் பராமரிப்பினை தனியார் மயமாக்குதலை கோவை மாநகராட்சி சோதனை முறையில் செயல்படுத்தியது. இதன்படி குறிப்பிட்ட எண்ணிக்கையில் தெருவிளக்குகள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் பராமரிப்புக்கு விடப்பட்டன. தரத்தை உறுதிசெய்யும் பொருட்டு விளக்குகளில் இணைப்புப் பாகங்களை உள்ளாட்சி அமைப்பே வழங்கும். இம்முறையை மற்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் சோதனை முறையில் கடைப்பிடித்துப் பார்க்கலாம்.

**ஈ) குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீரகற்றல் :-**

**குடிநீர் விநியோகம் :-**

தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்கள் எதிலும் நீரேற்று தலைமை நிலையங்கள் பராமரிப்பினையும் பொதுமக்களின் புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பதையும் கட்டணம் விதிப்பது, வசூலிப்பது போன்ற பணிகளையும் பயனுள்ள வகையில் தனியாரிடம் விடலாம்.

**கழிவுநீரகற்றல் :-**

பெரும்பாலான நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் ஆட்சியெல்லைக்குள் வெவ்வேறு அளவில் கழிவுநீர் வடிகால்கள் அமைந்துள்ளன. பெரும்பாலானவை பயனுள்ள வகையில் தூர் எடுக்கப்படாமல் விடப்பட்டுள்ளதால் அவை கொசு உற்பத்திக் களங்களாக மாறி கடுமையான சுகாதாரக்கேடு விளைவிப்பதாய் ஆகிவிட்டன. ஒப்பந்தமுறை மூலம் இவ்வடிகால்களை தூர் எடுக்கும் பணியையும், சுத்தம் செய்யும் பணியையும் தனியாரிடம் ஒப்படைத்துவிட்டு, ஒரு குறிப்பிட்ட நீள அளவுக்கு தக்கவாறு பணம் வழங்கி பயனுள்ளவகையில் பராமரிப்புப் பணியை செயல்படுத்தலாம்.

பொதுக் கழிப்பிட வசதிகள் :

இப்பணியை 100 சதவீதம் தனியாரிடமே விட்டுவிடலாம். பயனாளிகளோ அல்லது ஒப்பந்தக்காரர்களோ கட்டணக் கழிப்பிட முறையில் இதை அமுல்படுத்தலாம். உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் கழிப்பிட வசதித் திட்டங்களில் உள்ளார்ந்த நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் இத்திட்டங்களில் இருந்து தங்களை விலக்கிக் கொள்வது அவசரத் தேவையாகும்.

சாலைகள் மற்றும் பாலங்கள் :

உள்ளாட்சி அமைப்புகளின் உயிர்நாடி போன்ற பெருஞ்சாலைகளை ( ஒப்பந்த முறையில் தனியார் மூலம்பராமரிக்கலாம். சாலைகளில் ஏற்படும் குழிகளை நிரப்புதல், சாலைகள் வெட்டப்பட்டால் உடனடியாக சீரமைத்தல், நடைபாதைகளை பராமரித்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் ஆகிய பணிகளையும் தனியாரிடமே ஒப்படைத்து விடலாம்.

மூலதனம் :

நிதி மற்றும் தொழில்நுட்ப அம்சங்களைப் பொறுத்தவரை சாத்தியம் என்ற நிலையில் கட்டி, இயக்கி, மாற்றம் (Build Operate and Transfer) என்ற அடிப்படையில் பாலங்கள் கட்டுதல் போன்ற நகராட்சிப் பணிகளில் தனியார் முதலீடு செய்ய வாய்ப்பு உள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் வணிக வளாகங்கள், சந்தைகள் கட்டி வாடகையை உயர்த்த இயலாத நிலையில் தொடர்ந்து நட்டமடைந்துள்ளன. அதே நேரத்தில் நகராட்சிக்குச் சொந்தமான நிலங்கள் மிகவும் விலை மதிப்புமிக்க சொத்துக்கள் அவற்றை வருவாய் ஈட்டக் கூடிய பயனுக்குட்படுத்தல் அவசியம். நகராட்சி நிலங்களில் கிடைக்கும் வருவாயை பகிர்ந்து கொள்ளக்கூடிய வகையிலும் முதலீட்டாளருக்கு குத்தகைக்காலம் அளிக்கும் வகையிலும் தனியார் முதலீட்டினை வரவேற்கக் கருதிப்பார்க்கலாம். இது இழப்பு ஏற்படும் அபாயங்களை குறைப்பதுடன் விலைமதிப்பு மிக்க நகர்ப்புற நிலங்களை அதிக பயன்தரும் விதத்தில் உபயோகப்படுத்த வழிவகுக்கும்.

மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் :-

மேலே குறிப்பிட்ட பணிகளை ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பும் கருதிப் பார்த்து படிப்படியாக தனியாரிடம் விடக்கூடிய பணிகள் குறித்து முடிவெடுக்கலாம். இருப்பினும் நகராட்சிப் பணிகளை தனியாரிடம் விடுவதற்கு முன் பின்வருவனபற்றை கருத்தில் கொள்ள வேண்டும் :-

க) ஏலத்தால் முடிவாகக்கூடிய விலையில் (Competitive price) திறம்பட பயன்தரும் வகையில் நகராட்சி சேவைகள் கிடைக்க வேண்டும்.

ங) உள்ளாட்சி அமைப்புகளில் ஆட்குறைப்பு ஏற்படும் விதத்தில் அமையக்கூடாது.

ச) ஒப்பந்தம் குறித்த முடிவுக்கு அடிப்படையான அளவுகோல் அனைத்துத் தரப்பினருக்கும் விளங்கக்கூடிய விதத்தில் தெளிவானதாக இருக்க வேண்டும் என்பதால், பின்பற்றப்படும் ஒப்பந்த வழிமுறைகள் வெளிப்படையானதாக இருக்க வேண்டும்.

ஞ) ஒப்பந்த வழிமுறைகள் வெளிப்படையானதாகவும், ஆரோக்கியமான போட்டியை உருவாக்கும் விதமாகவும் இருக்கும்பொருட்டு மேற்கண்ட ஒவ்வொரு பணிக்கும் பொதுப் படுத்தப்பட்ட ஏல ஆவணங்கள் மற்றும் ஏலம் தெரிவு செய்யும் வழிமுறைகளை தயாரிக்குமாறு தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதியுதவி நிறுவனம் (Tamil Nadu Urban Infrastructure Financial Services Ltd) கேட்டுக் கொள்ளப்படும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இந்த ஆவணங்களை தேவைப்படின் உள்ளூர் நிலைமைகளுக்குத் தக்கவாறு மாற்றங்கள் செய்து பயன்படுத்தலாம்.

எஸ். மாலதி
அரசு செயலாளர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்.